98—

உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களை இடமாற்றம் செய்தல்.

* 4391—திருமதி. ப. சரஸ்வதி :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களை பொது மாறுதல் என்ற வகையில் இடமாற்றம் செய்வதிலிருந்து விதிவிலக்கு அளிப்பதை அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) அப்படி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்கின்ற அரசு உத்தரவு எதையும் பிறப்பிக்கவில்லை.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊயமுற்றவர்கள் ஓரிடத்திலேயிருந்து பல மைல் தூரம் கடந்து சென்று அங்கு பணியாற்றுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்ற காரணத்தினால், இதை அரசு பரிவோடு பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூன்று ஆண்டுப் பணிக் காலம் முடிந்த அரசுப் பணியாளர்களை நிர்வாக நலன் கருதி வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்று 1990 ஆம் ஆண்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இந்த ஆணையிலிருந்து உடல் ஊனமுற்றவர்களுக்கு என்று விலக்கு எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனால், வாகன வசதி இல்லாத இடங்களுக்கு மாற்ற வேண்டாம் என்கின்ற அறிவுரை மட்டும் எல்லாத் துறையினருக்கும் சமூக நலத் துறை அலுவலர்களால் வழங்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 99. திரு. வே. தம்புசாமி ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

99—

மோகனூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு பட்டா.

* 1527—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

1992 பிப்ரவரி 7]

(அ) திருவாரூர் வட்டம், மோகனூர் கிராமத்தில் ஆதி திராவிடர்கள் குடியிருக்கும் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கப் படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் கிராமத்தில் கடந்த 2 ஆண்டுகளாக, பட்டா வேண்டுமென்று கோரி. அப்பகுதியிலே இருக்கிற ஆதி திராவிட மக்கள் மனுக்கள் போட்டு, வாரம் ஒரு முறை வட்டாட் சியர் அலுவலகத்திற்கு அலைந்தால் கூட, அவை கொடுக்கப்படு வதில்லை. அதுமட்டுமல்ல, தொடர்ந்து திருவாரூர் வட்டாட் சியர் அலுவலகத்தில் ஏறத்தாழ ஆயிரம் மனுக்கள் வரை இப்படி தேங்கியிருக்கின்றன. எவ்வளவோ கடிதம் எழுதினால் கூட பதில் கிடைப்பதில்லை. எனவே, அவ்வாறு தேங்கிக் கிடக்கிற பட்டாவை விரைவாக கொடுப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் வட்டம், மோகனூர் கிராமத்தில் மொத்தம் 49 ஆதி திராவிட குடும்பங்கள் உள்ளன. அவற்றில், 28 ஆதி திராவிட குடும்பங்களுக்கு நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள, 21 ஆதி திராவிட குடும்பங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து, மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே போன்று, தேங்கியிருக்கிற அந்தப் பட்டாக் களை—அதாவது, விலை கொடுத்து நிலத்தை வாங்கி, அதற்கு பட்டா கொடுப்பதிலே காலதாமதம் ஆவதைப் பற்றிப் பிரச் சினை இல்லை—ஆனால் குடியிருப்பவர்கள், நீண்ட காலமாகக் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு பட்டா கொடுப் பதற்கு காலதாமதம் இருக்கிறது. இதனுடைய விளைவு தமிழக அரசு தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்கும் போது பட்டா கேட்கிறது; அவர்களுக்கு பட்டா கிடையாது. 20 வருடங்கள், 30 வருடங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அரசு திட்டங்களை அவர்களுக்கு செய்து கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தேங்கியிருக்கிற பட்டாவை

ஒரு குறித்த காலத்திற்குள் அவர்களுக்கு வழங்குவதன் மூலம் இந்த நிதியாண்டிலாவது, அரசு கட்டிக் கொடுக்கக் கூடிய தொகுப்பு வீடுகள் அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற வகையிலே ஒரு காலத்தை நீங்கள் குறித்து அறிவிக்க வேண்டும். அவ்வாறு அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது குடியிருந்து வரும் பகுதியாளர் கள், குளத்துப் புறம்போக்கில் இருந்து வருகிறார்கள். ஆகையினால் தான் அரசு தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மிக விரைவில் கொடுப்பதற்கு நடவடிக்கை துரிதப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 100; திரு. கா. சின்னசாமி; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

100—

மலைவாழ் மக்களுக்கு புதிய சாலை வசதி.

*3970—திரு. கா. சின்னசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முள்ளுக் குறிச்சியிலிருந்து பூசனிக்குழி வழியாக நரியன்காடு வரை கொல்லி மலைக்கு மலைவாழ் மக்கள் பயனுக்காக புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)